(2) ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் இறுதியாகப் பணியாற்றிய இடத்திலிருந்து தம் சொந்த ஊருக்குச் செல்வதற்காக அவர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும், அவர்களுடைய சொந்தச் சாமான்களை எடுத்துச் செல்வதற்கும் பயணப் படியை ஓய்வுக்கு முன்னதாக விடுப்பின் போதோ, அல்லது ஓய்வுபெற்ற நாளிலிருந்து 6 மாதங்களுக்கு உள்ளாகவோ கேட்டுப் பெற வேண்டும்.

இவ்விரண்டினையும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த இரண்டாவது சம்பளக் கமிஷன் சிபாரிசுகளின் அடிப்படையில், ஓய்வு பெற்றவர்களுக்குச் சில வாய்ப்புகள் செய்திருப்பதைப்பற்றிச் சொன்னார்கள். சமீபத்தில், 1971-ம் வருடம் பிப்ரவரி மாதம் 8-ம் தேதியிட்ட நிதி இலாக்கா அரசு ஆணை எண் 228-இன்படி, அக்டோபருக்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கு இந்த 'க்ராசுவடி' சம்பந்தமாக ஏற்கனவே இரண்டு மாதச் சம்பளம் என்று இருந்ததை ஒரு மாதச் சம்பளம் என்று ஆக்குவதாகவும், குடும்பப் பென்ஷன் சம்பந்தமாக நிதி உதவியை அதிகப்படுத்துவது என்பதாகவும், ஓய்வுபெறுவதற்குரிய சர்விஸ் 30 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்பதை 25 ஆண்டுகளாகக் குறைந்திருப்பதாகவும் உத்தரவு போட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் எந்த அளவுக்கு அமலாகியிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இவ்வளவு விவரங்களையும் நான் தருவதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் தனிக் கேள்வி போட்டால் நலமாக இருக்கும்.

DR. H. V. HANDE: While all sections of the House must be grateful to the Hon. Minister for giving concession to pensioners, will the Government reconsider the problems of pensioners in the light of several representations from Pensioners' Associations recently made to the Hon. Chief Minister and also in the light of the assurances given by the Hon. Minister? Will he see to it that they are given medical facilities and in respect of the present minimum pension and teachers' pension will be see to it that the minimum pension is raised from Rs. 50 to Rs. 60. Taking into consideration the spiralling up of prices will the Hon. Minister give such a further assurance on the floor of the House?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஓய்வு பெற்றவர்களுக்கு மருத்துவச் சலுகை அளிக்கும் வகையிலேகூட, ஓய்வுபெறும் நேரத்திலே கிடைத்துவந்த மருத்துவச் சலுகை கிடைக்கவும், ஆனால் அவர்கள் ஒரு மாத பென்ஷன் தொகைக்கு மேற்படாத அளவுக்கு அல்லது 200 ரூபாய் கூடுதல் தொகைக்கு மருந்து வாங்கிக்கொள்ள அல்லது சிகிச்சைக்குச் செலவழிக்க அனுமதிப்பது என்பதும் ஒரு பரிந்துரை ஆகும். இதை அரசு ஏற்றுக்

1971 ஜூன் 21]

கொண்டு விரைவில் உத்தரவு பிறப்பிக்க இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குச் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே, ஃபெஸ்டிவல் அட்வான்ஸைக் குறித்து செய்யப்பட்டிருக்கிற பரிந்துரையையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதுவும் விரைவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

மற்றும் அவர்கள் கேட்டுள்ள பல சலுகைகளைப் பொறுத்து, அவற்றை எந்த நிலையிலேயிருந்து ஆராய வேண்டும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். நிதி நிலை அடிப் படையில் அவைகளெல்லாம் ஆராயப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, திருவாங் கூர்-கொச்சியில் இருந்து, 1960-க்கு முன்னதாக ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு எந்த விதமான பென்ஷனும் வழங்கப்படவில்லை. அந்த மாதிரி ஆசிரியர்களுக்குப் பென்ஷன் வழங்கப்படவில்லை யானால் அதைப்பற்றி அரசாங்கம் புனர்ப்பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் அதற்கான விவரங்களை அளிக்க முடியும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இரண்டாவது சம்பளக் கமிஷனுடைய ஆணையின்படி, நீண்ட சர்வீஸ் உள்ளவர் களுக்குப் பலன் இல்லை, புதிதாக வந்தவர்களுக்குத்தான் பலன் கிடைக்கிறது என்று கூறப்படுகிறதே அது எந்த அளவுக்கு உண்மை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கூறப்படுகிற அளவுக்குத் தான் உண்மை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, 1970-ம் வருடம் அக்டோபர் மாதம் 2-ம் தேதி முதல் அமலாகியிருக்கும் இந்தப் பென்ஷன் திட்டத்தின்படி, ஏற்கனவே 1970-ம் வருடம் பிப்ரவரி மாதம் 26-தேதிக்குப் பின்னால் ஓய்வு பெறக்கூடியவர். களுக்குத்தான் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், அதற்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு நான்கு சலுகைகள் என்று குறிப்பிடப்பட்டு, அதில் இந்த 'பெஸ்டிவல் அட்வான்ஸ்' 100 ரூபாய் கொடுப்பதும் சாங்ஷன் செய்திருப்பதாக அறிகிறேன். அப்படியானால், அதற்குமுன்னால் ஓய்வுபெற்றவர் களுக்கு மெடிகல் கன்ஸெஷன் அளிப்பது, பஞ்சப்படி அளிப்பது சம்பந்தமாகவும் பரிசீலனை செய்யப்படுமா? பஞ்சப்படி சம்பந்த மாக ஒரு சிறு விளக்கம் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி ரூபத்திலே கேளுங்கள்.

[1971 ஜூன் 21

திரு. கே. டி. கே. தங்கமணி: பஞ்சப்படியும் இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு தாசில்தார் 150 ரூபாய் பஞ்சப்படி ஏற்கனவே வாங்கியிருப்பார். அவருக்கு அரைப் பஞ்சப்படி என்ற முறையில் 75 ரூபாய் கொடுக்கப்படவில்லை. ஆகவே, உத்தரவு போடுகிறபோது, ஏற்கனவே பெற்ற பஞ்சப்படியும் இனி மேல் வரக்கூடிய பென்ஷனிலே சேர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முதலில் தேதியைப்பற்றிச் சொன்னார்கள். ஏதாவது ஒரு தேதியை வைத்துத்தான் நாம் இந்தக் கால கட்டத்தை நிர்ணயிக்க வேண்டும். அந்த வகையிலே தான் 2—10—1970 என்கிற அந்தத் தேதியை நிர்ணயித்துக் கொண்டோம். மற்றபடி, பஞ்சப் படியிலே உள்ள வேறுபாடுகளை யெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இவைகளெல்லாம் தகுந்த முறையிலே ஆராயப்பட்டு வருகின்றன. உரிய நேரத்தில், உரிய அளவில், நிதி இருக்கின்ற நிலையில் இவைகளைப் பற்றிப் பரிசீலிக்கப் படும்.

திருமதி. த. ந. அனந்தநாயகி: சார். கேரளாவில் 'மினிமம் பென்ஷன்' மாதத்திற்கு 45 ரூபாயாக இருக்கிறது. தமிழ்நாட்டில் 30 ரூபாயாக இருக்கிறது. இதை உயர்த்த ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கேரளத்திற்கும் தமிழ் நாட்டுக்கும் இதைப்போல வேறு பல வித்தியாசங்களும் இருக் கின்றன. அங்கே குறைவாக உள்ள விஷயங்களும் உண்டு. இங்கே அதைவிட அதிகமாக உள்ள விஷயங்களும் உண்டு.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த ஓய்வு பெறக்கூடிய அரசு ஊழியர்கள் தங்களுடைய பென்ஷனைப் பெறுவதிலே மிகவும் காலதாமதம் ஆகிறது. ஓய்வு பெற்றவுடன் ஓரிரண்டு மாதங்கள், அல்லது மூன்று மாதங்களுக் குள்ளாகக் கட்டாயம் பென்ஷன் கிடைக்கக்கூடிய முறையில் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பொதுவாக, அரசு நிர்வா கங்களில் உள்ள எல்லாக் கால தாமதங்களையுமே தவிர்க்கவேண்டும் என்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது. ஆகவே, அதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்ற ஹெட் க்ளார்க்ஸ், அடென்டர்ஸ், மற்றும் உள்ள அலுவலர்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்பதைக் கேட்க விழைகிறேன்.

1971 ஜூன் 21]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நான் தொடக்கத்திலேயே பல கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். இதெல்லாம், இருக்கும் நிதி நிலையைப் பொருத்துத் தான் ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: புதிதாக ஓய்வு பெறுகிறவர்களுக்குப் பென்ஷன் நிர்ணயிக்கின்றபோது 9 மாதச் சம்பள சராசரி என்று போடப்படுவதாக அறிகிறேன். சாதாரணமாக லீவ் சம்பளம் கொடுப்பதென்றால் கடைசியாக வாங்கும் சம்பள அடிப்படையில் கொடுக்கும் நிலை இருக்கிறதா? அப்படியானால் காலதாமதம் கூட இல்லாமலிருக்கும் என்பதைப்பற்றி முதலமைச்சர் ஆராய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதையும் பரிசீலிக்கலாம்.

Tamil Nadu Text Book Society

* 8 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether this Government has formed a Corporation to publish text books for Standards III to XI; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் ஆன பாட நூல்களை வெளியிடுவதற்காகத் தமிழ் நாடு பாடநூற்கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது 1970-ம் வருடம் மார்ச் மாதம் 4-ம் தேதி அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1 முதல் 10-ம் வகுப்பு முடிய தமிழ் (ஆழ்ந்த படிப்பு) 4 முதல் 10-ம் வகுப்பு முடிய ஆங்கிலம் (ஆழ்ந்த படிப்பு) 3 முதல் 10-ம் வகுப்பு முடிய கணக்கு ஆகிய பாடங்களுக்கு அரசுப் பாடநூல்கள் வெளி வந்துள்ளன. 1971-72-ம் ஆண்டில் 11-ம் வகுப்பிற்காக கணக்கு, வரலாறு, நிலவியல், அறவியல் ஆகிய பாடங்களுக்குத் தமிழில் அரசுப் பாடநூல்கள் வெளிவரும்.

Dr. H. V. HANDE: Sir, is it a fact that there is no proper co-ordination between the Publishing Department and the Education Department and if so, will the Government come forward to tell us the concrete steps that they are going to take in regard to this matter so that students will get quality books in time and the price of books also will be less than what they have been before. Now the prices of books are high. Will the Government take all these factors into consideration and give us some indication as to how best they are going to solve this problem?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே சென்ற ஆண்டு புது புத்தகங்கள் வெளியிடுவதில் காலதாமதம் ஏற்பட்டது. அந்தச் சங்கடங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக இந்த ஆண்டு ஒரு மாதத்திற்கு முன்பே புத்தகங்கள் வெளியிடப் பட்டு விட்டன. அந்த புத்தகங்கள் அரசு புத்தக வெளியீட்டு